**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC 90/2021**
**Deposition of witness for prosecution –PW– 1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கிருஷ்ணன் |
| Father Name | : | திரு. நாகலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | காண்டிராக்டர் |
| Religion | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 3rd day of February 2024.

**<u>எதிர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண அபிடவிட்டை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிரூபண அபிடவிட்டில் எதிரி எனக்கு வழங்கியதாக சொல்லப்பட்ட காசோலை எண்.547001 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை பரோடா வங்கி கிளை காசோலை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்நீதிமன்றத்தில் எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ.1 ஆவணமான காசோலையில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா இராமநாதபுரம் கிளை என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி நிரூபண அபிடவிட்டிலும் பிரதான அசல் மனுவிலும் பரோடா வங்கி கிளை என்று சொல்லப்பட்டு காசோலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தனியாக வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. இது போன்ற காசோலை மோசடி வழக்குகள் மற்ற நபர்களின் மீதும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வட்டிக்கு தொழில் செய்து வருகிறேன் என்றும் அதற்கு எந்த விதமான உரிமமும் பெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வருவாய்மூலம் எது என்றால் நான் ஜேசிபி, லாரி வாகனங்கள் வைத்திருக்கிறேன் மேலும் நான் காண்டிராக்ட் தொழில் செய்து வருகிறேன். மேற்படி வருவாய் மூலங்கள் தொடர்பான ஆவணங்கள் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வருமானம் வருவதற்கான வருமான வரி கணக்குகள் செலுத்துகிறேனா என்றால் நான் ஏற்கனவே வருவமான வரி கணக்குகள் செலுத்தியுள்ளேன். 2020 ஆம் ஆண்டு வரை நான் மேற்படி

வருமான வரி கணக்குகள் செலுத்துவதற்கான ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த விதமான வருமான வரி கணக்குகளையும் மேற்கொண்டு எத்தகைய வருமான வரியையும் செலுத்தாத காரணத்தினால் அதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனவே வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2021ம் ஆண்டிற்கான வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 08.01.2021 என்பது கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான். மேற்படி காலக்கட்டத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால் ஜேசிபி, லாரி முதலிய வாகன போக்குவரத்து தடை செய்யப்பட்ட காரணத்தினால் எந்தவித வருமானமும் மேற்படி வாகனங்கள் வரவில்லை என்றால் சரிதான். 70, 80 சதவீத போக்குவரத்து இருந்தது. 70, 80 சதவீத போக்குவரத்து இருந்தது என்பது வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாகனங்கள் மேற்படி போக்குவரத்து சம்பந்தமான பணிகளை அக்காலக்கட்டத்தில் மேற்கொண்டது என்பதற்காகவும் அதன் மூலம் எனக்கு வருமானம் ஏற்பட்டது என்பதற்காகவும் எந்த ஒரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எந்த விதமான போக்குவரத்தையும் மேற்படி காலக்கட்டத்தில் எனது வாகனங்கள் மேற்கொள்ளவில்லை என்றும் அதன் வாயிலாக எந்த விதமான வருமானமும் நான் ஈட்டவில்லை என்றும் அதனால் நான் அது தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கொரோனா காலக்கட்டத்தில் நான் எந்த விதமான காண்டிராக்ட் தொழிலும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அதனால் எந்த விதமான வருமானமும் ஈட்டவில்லை என்றால் சரிதான். பானு நாச்சியார் என்ற பெண்ணை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பானு நாச்சியார் என்ற பெண் எதிரியின் வீட்டில் குடியிருந்தார் என்றும் அவர் பல நபர்களிடம் கடன் வாங்கி மோசடி செய்துள்ளார் என்றும் அது சம்பந்தமாக நான் உட்பட பல நபர்கள் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் வேறு மையில் உள்ளது சரிதான் ஆனால் மேற்படி காசோலையை எதிரி தான் நிரப்பி கொடுத்தார். எதிரி அரசு ஊழியர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி அரசு ஊழியர் என்பதால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதி மற்றும் விபரப்படி எதிரி என்னிடம் எத்தகைய பணமும் கேட்கவில்லை என்றாலும் அது தொடர்பான காசோலை எதுவும் எதிரி என்னிடம் தரவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரியின் வீட்டில் குடியிருந்த பானு நாச்சியாருக்கு நான் கொடுத்த கடனுக்காக அவரிடமிருந்து இந்த தாவா காசோலையை நான் வாங்கியுள்ளேன் என்றும் அவரிடமிருந்து காவல் துறை மூலமாக நடவடிக்கை மேற்கொண்டும் மேற்படி பணம் பெற முடியாத காரணத்தினாலும் எதிரி அரசு ஊழியர் என்பதால் அவரிடமிருந்து பணத்தை பெற வேண்டும் என்றும் நானாக பூர்த்தி செய்து இந்த வழக்கு காசோலையை தயார் செய்து இந்த வழக்கிகனை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் நேரடியாக பணம் எதுவும் பெறவில்லை என்ற காரணத்தினாலும் அவர் இந்த வழக்கு காசோலையை கொடுக்காத காரணத்தினாலும் மேற்படி ம.சா.ஆ.1 தொடர்பான விபரங்களை தவறாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடமிருந்து எந்த விதமான பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் அனுப்பிய

வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எந்த விதமான பதில் அறிவிப்பும் எதிரி அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காசோலை மோசடி வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வங்கியில் இருந்து பரிவர்த்தனை செய்து பணம் எதுவும் நான் எடுத்து எதிரிக்கு கடனாக கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கையில் இருந்த பணத்தை கொடுத்தேன். கொரோனா காலக்கட்டத்தில் மேற்படி கடன் தொகையை கையிருப்பாக வைத்திருக்க சாத்தியமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/–N.நிலவேஸ்வரன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.